# தம்பலகமம் பிரதேச சபை

-----------------------------------------------

## திருக்கோணமலை மாவட்டம்

------------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்

--------------------------

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 19 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஏப்பிரல் 01 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தம்பலகமம் பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்நன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 2013 ஆம் ஆண்டு தயட்டகிருளை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா.645,435 தொகையான தளபாடமும் பொருத்துக்களும் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா.17,615 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| காணி, கட்டிடம் | 44,170,444 | நிலையான சொத்துப் பதிவேட்டு மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| பொறித்தொகுதிகள் | 1,564,960 | |
| மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 6,878,050 | |
| வருமான வைப்பு | 1,140,523 | விபரமானபட்டியல், காலப்பகுப்பாய்வு |
| கேள்வி வைப்பு | 366,081 | |
| நானாவித வைப்பு | 303,862 | |
| ஏனைய வைப்பு | 2,710,125 | |

1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள்அதிகாரச் சட்டத்தின் அத்தியாயம் II பிரிவு 158 | சபையின் எல்லைக்குட்பட்ட சகல பிரிவுகளினதும் ஆதனவரி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) மாகாண நிதி ஒழுங்கு விதி இலக்கம் 236.3 | சபையின் இரண்டு வங்கி கணக்குகள் |

தொடர்பாக மீளாய்வாண்டின் ஜனவரியிலிருந்து திசெம்பர் மாதம் வரை வங்கிக் கணக்கிணக்கக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------------------------------

### 2.1 நிதி பெறுபேறுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் வருமானத்திலும் கூடிய செலவினம் ரூபா.17,436,411 ஆகும். இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்திலும் கூடிய செலவினம் ரூபா.21,231,631 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 3,795,220 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

--------------------------------------------------------

சபையில் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு காலப்பகுதிக்கும் முன்னைய ஆண்டிற்கும் மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், வருமான நிலுவை என்பவற்றுக்கான தகவல் கீழே தரப்படுகின்றன

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திரண்ட நிலுவை 31.12.2013 |
|---|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரிகளும் வரிகளும் | -- | -- | -- |
| வாடகைகள் | 6,358 | 3,531 | 3,027 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 8,220 | 5,601 | 2,619 |
| ஏனைய வருமானம் | 15,035 | 1,263 | 13,772 |

2.3 நீதிமன்ற தண்டப்பணம்

----------------------------------------

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றத்திடமிருந்து 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தை கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 129(2) (அ) பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 முத்திரைக் கட்டணம்

-------------------------------------

2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணத் தொகையினை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 178 மற்றும் 179 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சபையினால் கடன் பெறப்பட வேண்டுமாயின் உள்;ராட்சி அமைச்சின் முன் அனுமதி பெறப்படவேண்டுமென கூறப்பட்ட போதும் 2013 ஆம் ஆண்டில் ரூபா 3,200,000 தொகையான கடன் பெறப்பட்டு டிப்பர் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பாக முன் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை வாசகர்களுக்கு வழங்கப்பட்ட 87 நூலகப்புத்தகங்களை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

4 மனிதவள முகாமைத்துவம்

-----------------------------------------------

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

2013.12.31 இல் உள்ளவாறு

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | -- | 01 | -- |
| உதவியாளர்கள் | 18 | 09 | 09 | -- |
| சிற்றூழியர்கள் | 27 | 12 | 15 | -- |
| ஏனையவர்கள் | -- | 33 | -- | 33 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முகாமைத்துவ உதவியாளர் பதவியும் வருமான உத்தியோகத்தர் பதவியும் கடந்த 08 வருட காலமாக வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) முற்பணங்களின் அறவீடு
(உ) வரி சேகரிப்பு
(ஊ) பெறுகை நடைமுறை
(எ) கடன் கட்டுப்பாடு